# Project 194
# செயற்றிட்டம் 194

DP EDUCATION

**Coding School**







http://www இணையத் தளத்தைப் பார்க்கவும்

Glitch ஆரம்பியுங்கள்

LIVEWORKSHEETS

# CSS களில் element ஒன்று style பண்ணும் முறை.

## Basic Selectors

❖ css களின் style பண்ணுவதற்கு தேவையான element ஐ select பண்ணும் முறைகள் பல உள்ளன.

- Types
- ID
- Class
- Attribute

❖ Html tag பயன்படுத்தி தேவையான element ஐ style பண்ணும் முறைக்கு ஏற்ப types style ஆகும்.

❖ உதாரணமாக html body tag இற்கு style ஒன்று பெற்றுக் கொடுத்தல்.

style.css PRETTIER

```
body{
  margin: 10px;
}
```

❖ எங்களுக்கு element ஒன்றை select பண்ணிக் கொள்ள முடியுமான id ஒன்றை பயன்படுத்தி.

LIVEWORKSHEETS

❖ Html tag இற்கு பிறகு id எனப் பெற்றுக் கொடுத்து html tag இற்கு unique id ஒன்றைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

```
<body>
   <section id="products"></section>
</body>
```

❖ அவ்வாறு unique id ஒன்றைப் பெற்றுக் கொடுத்து அந்த id இற்கு css மூலம் style பெற்றுக் கொடுக்கும் போது அந்த styles அந்த id உள்ள elements இற்கு மட்டும் உரியதாகும்.

❖ Css களின் # symbol ஒன்றின் மூலம் id ஐ பெற்றுக் கொடுத்து styles பண்ண முடியும்.

```
#products{
  padding: 0;
}
```

❖ Class ஐ பயன்படுத்தி எங்களுக்கு தேவையான element section இற்கு style பண்ணும் முறையை பார்ப்போம்.

❖ Html tag இற்கு பிறகு class என பெற்றுக் கொடுப்பதன் மூலம் html tag ஒன்றுக்கு class ஐ பெற்றுக் கொடுக்க முடியும்.

LIVEWORKSHEETS

```
<body>
   <section id="products">
     <article class="product"></article>
     <article class="product"></article>
     <article class="product"></article>
    </section>
</body>
```

- Class இற்கு style பெற்றுக் கொடுக்கும் போது நிறுத்தற் புள்ளிக்குப் பின்பு (".") இற்குரிய class இன் பெயரை பெற்று கொடுத்து style பெற்றுக் கொடுக்கப்படும்.

```
.product{
  background-color: coral;
}
```

- Id மற்றும் class ஐ பயன்படுத்தி style பண்ணும் போது பார்த்த பார்வைக்கு ஒரே விதமாக தெரியும். ஆனால் இங்குள்ள மாற்றம் என்னவென்றால் ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே id ஐ element ஒன்றுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் ஒரே class ஐ element பலவற்றுக்காகவும் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு உள்ளது.

- Attribute பயன்படுத்தி style பண்ணும் முறையை அவதானிப்போம்.

- அதற்காக நாம் dp code website இற்கு நகர்வதற்கு coding பண்ணுவோம்.

LIVEWORKSHEETS

```html
<body>
    <a href="https://dpcode.lk/" target="_blank">DP coding School</a>
</body>
```

நீங்கள் பெற்றுக் கொடுக்கும் link இற்கு உரிய website உங்கள் web browser இல் புதிய tab இற்குள் open ஆவதற்கு இந்த code பயன்படுத்தப்படும்

- தற்போது கீழே உள்ளவாறு style பண்ணிக்கொள்க .

```css
a[href="https://dpcode.lk/"]{
  color: orange;
}
```

- இவ்வாறு attribute பயன்படுத்தி style பண்ணிக்கொள்ள வாய்ப்புள்ளது.

- ஆனால் இங்கு அந்த attribute இன் value இல் மாற்றம் ஏற்பட்டால் அந்த மாற்றம் css மூலம் நடைபெறாது.

- உதாரணமாக மேலே dp coding school இன் link இல் மாற்றம் ஏற்பட்டால் மேலே நாம் பயன்படுத்திய style இலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் .

- இதற்கு காரணம் style களில் முழு link ஐயும் பயன்படுத்துவதாகும். இதற்கு தீர்வாக முழு link ஐயும் use பண்ணாது “dpcode” என்ற சொல்லை மட்டும் use பண்ணி style பண்ணுவோம்.

```css
a[href*="dpcode"]{
  color: orange;
}
```

LIVEWORKSHEETS

❖ மேலும் characters start ஆகும் முதல் சொல்லை பயன்படுத்தி style பண்ணும் முறை பின்வருமாறு அமையும்.

```
a[href^="https"]{
  color: orange;
}
```

❖ கடைசி சொல்லை பயன்படுத்தி style பண்ணும் முறை பின்வருமாறு அமையும்.

```
a[href$="lk/"]{
  color: orange;
}
```

❖ முதல் சொல்லும் கடைசி சொல்லும் என்ற இரண்டையும் பிடித்து code பண்ணும் முறை பின்வருமாறு அமையும்.

```
a[href^="https"][href$="lk/"]{
  color: orange;
}
```

## Relational Selectors

❖ உங்களுக்கு தற்போது basic selectors மூலம் elements தெரிவு செய்து கொள்ள தெரியும்.தற்போது நாம் relational selectors மூலம் elements தெரிவு செய்து கொள்ளும் முறையை பார்ப்போம்.

❖ அதற்காக index.html page பின்வருமாறு உருவாக்கிக் கொள்வோம் .இங்கு paragraph element இற்கு style பெற்று

```
<body>
  <section id="products">
    <p>
      This is a basic HTML starter project you can build on however you like.
    </p>
  </section>
</body>
```

கொடுக்க வேண்டும்.

LIVEWORKSHEETS

❖ Paragraph element இற்கு style பெற்று கொடுக்க முடியுமான முறை ஒன்று paragraph element இற்கு id ஒன்று அல்லது class ஒன்றைப் பெற்றுக் கொடுத்து அதன் மூலம் element இற்கு style பெற்றுக் கொடுப்பதாகும்.

❖ ஆனால் இங்கு paragraph element இற்கு id ஒன்று அல்லது class ஒன்று பெற்று கொடுக்காது style பண்ண முடியுமான முறை ஒன்று உள்ளது.

```
body{
  margin: 10px;
}
#products p{
  color: orange;
}
```

இவ்வாறு section இன் id இற்குப் பின்பு p என பெற்றுக் கொடுத்து paragraph element இற்கு style பெற்றுக் கொடுக்க முடியும்.

❖ அப்போது result பின்வருமாறு பெற்றுக் கொள்ள முடியும்.

style.css — PRETTIER — nimble-tinted-politician.glitch

```
body{
  margin: 10px;
}
#products p{
  color: orange;
}
```

This is a basic HTML starter project you can build on however you like.

❖ Selection element இற்குள் மேலும் paragraph element சேர்க்கும் போது மேலுள்ளவாறு style apply ஆகும்.

index.html — PRETTIER — nimble-tinted-polit

```
</head>
<body>
  <section id="products">
    <p>
      This is a basic HTML starter project you can build on however you like.
    </p>
    <article>
      <p>
        It defines the content and structure of web content.
      </p>
    </article>
  </section>
</body>
```

This is a basic HTML starter project you can build on however you like.

It defines the content and structure of web content.

LIVEWORKSHEETS

❖ தற்போது எங்களுக்கு முதல் paragraph element மட்டும் style பண்ணுவதற்கு தேவை என நினைப்போம்.

❖ இங்கே முதல் paragraph element , product section element இல் direct child ஆகும்.

❖ அதனால் பின்வருமாறு style வடிவமைக்க முடியும்.




❖ தற்போது product section element இற்கு பிறகு உள்ள paragraph element ஒன்றிற்காக style பண்ணும் முறையை பார்ப்போம்.

❖ Index.html page ஐ பின்வருமாறு code பண்ணிக் கொள்க.

```
<body>
  <section id="products">
    <p>
      This is a basic HTML starter project you can build on however you like.
    </p>
    <article>
      <p>
        It defines the content and structure of web content.
      </p>
    </article>
  </section>
  <p>
    It is often assisted by technologies such as Cascading Style Sheets and scripting languages such as JavaScript.
  </p>
  <p>
    Web browsers receive HTML documents from a web server or from local storage and render the documents into multimedia web pages.
  </p>
</body>
```

LIVEWORKSHEETS

❖ தற்போது பின்வருமாறு style பண்ணிக் கொள்வோம்.




product id இற்கு பிறகு +(plus) புள்ளியுடன் p பெற்று கொடுக்கப்பட்டுள்ளது . அப்போது product section element இற்கு பிறகுள்ள paragraph element இற்கு style apply ஆகியிருக்கும். அந்த paragraph element இற்கு பிறகு உள்ள paragraph element இற்காக இந்த style apply ஆகாது.

❖ தற்போது product section element இற்கு பிறகு உள்ள எல்லா paragraph element ஒன்றுக்கு style பண்ணும் முறையை பார்ப்போம்.




product id இற்குப் பிறகு ~ புள்ளியுடன் p பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. அப்போது product section element உள்ள எல்லா paragraph element இற்கு style apply ஆகும் .

❖ இங்குள்ள பிரச்சனையாவது style பெற்றுக் கொடுத்த பின் html code இல் மாற்றம் ஏற்படுத்தினால் அம்மாற்றம் style இற்கு தாக்கத்தை ஏற்படுத்தும்.

LIVEWORKSHEETS

❖ மேலே உள்ள html code இன் கடைசி paragraph element , product section element இற்கு மேலால் கொண்டு செல்லும் போது மேலே உள்ள style அந்த paragraph element இற்கு apply ஆகாது.




LIVEWORKSHEETS